2010 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞருடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்தில் இருக்கக்கூடிய சார்பதிவு அலுவலகங்களுக்கு, வாடகைக் கட்டடத்தில் இயங்கக்கூடிய அந்த அலுவலகங்களுக்கு, புதிய சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று, ஆண்டுதோறும் அதற்காக நம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவை கட்டப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-00

இதுவரையில் 45 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடத்திற்காக சுமார் 8.75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோன்று 6 ஒருங்கிணைந்த வளாகங்கள் கட்டுவதற்காக சுமார் 10 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நிச்சயமாக, வருங்காலத்தில், படிப்படியாக சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவணங்களைப் பதிவு செய்யக்கூடிய எண்ணிக்கைகளைப் பொறுத்தும், பழைமை வாய்ந்த கட்டடங்கள் என்ற அந்த அடிப்படையை மனதிலே வைத்துக்கொண்டும் கலைஞருடைய ஆட்சியைப் பொறுத்தமட்டில் தமிழகத்தில் வாடகைக் கட்டடங்களில் இருக்கக்கூடிய சார்பதிவாளர் அலுவலகங்கள் எல்லாம் சொந்தக் கட்டடங்களாக மாற்றப்படும். எனவே, வருங்காலத்தில் நிச்சயமாக அங்கும் கட்டப்படும் என்கிற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

56—

நெசவுப் பூங்கா

***106294—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டுத் தொகுதியில் நெசவுப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[2010 ஏப்ரல் 19

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டுத் தொகுதியில் நெசவுப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.*

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கோவை மாவட்டம் மற்றும் ஈரோடு மாவட்டத்தைத் தவிர்த்து, மிகப் பெரிய அளவிலே நெசவாளர் பெருமக்கள் வாழ்கின்ற பகுதி பள்ளிப்பட்டுப் பகுதி ஆகும். குறிப்பாக, எங்களுடைய திருவள்ளூர் மாவட்டத்திலே 8 தொகுதிகள் இருந்தாலுங்கூட, என்னுடைய தொகுதியில்தான் நெசவாளர்கள் நிறைந்திருக்கின்றார்கள். அந்தப் பகுதியிலே நெசவாளர்கள் பயனடையும்வண்ணம், நெசவுப் பூங்கா அமைப்பது அவசியமாகக் கருதப்படுகிறது. மிகச் சிறந்த சாதகமான சூழ்நிலை இருக்கின்ற இந்த நாட்களிலே, நம்முடைய அரசு முயற்சித்து அங்கு ஒரு நெசவுப் பூங்கா உருவாக்குவதற்கு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார், மத்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசாங்கத்தினுடைய பங்களிப்போடு இந்தப் பூங்கா அமைக்கப்படுகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவருடைய பகுதியிலே தனியார் இதிலே ஆர்வமாக இருக்கிறார்கள் என்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அதற்கு வேண்டிய பணிகளைச் செய்வார்கள் என்று சொன்னால், தமிழக அரசு மத்திய அரசாங்கத்திற்கு இதுகுறித்துப் பரிந்துரை செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.*

2010 ஏப்ரல் 19]

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரையிலே, அதிகமான நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ள பகுதிகளில் எங்களுடைய பகுதியும் ஒன்றாகும். இதனுடைய Apex Body என்று சொல்லப்படுகிற கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், இன்றைக்குப் பவள விழா காணுகின்ற ஆண்டைக் கொண்டிருக்கிறது. பத்மஸ்ரீ நாச்சிமுத்து, எம்.பி., போன்றவர்கள் பங்களிப்பு செய்து மிகப் பெரிய அளவில் வெற்றி பெறச் செய்த நிறுவனம், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம். பவள விழா காணுகின்ற அந்த நிறுவனத்திற்குச் சொந்தமாக ஏராளமான காலியிடங்கள் குறிப்பாக, நகரினுடைய பிரதானமாக இருக்கக்கூடிய எழும்பூரிலே இருக்கிறது. அதைப் பயன்படுத்தி எல்லா நெசவாளர் பெருமக்களும் பயனடையும்வண்ணம் ஒரு வணிக வளாகம், ஒரு Commercial Complex அல்லது மிகப் பெரிய பிளாசா என்று சொல்லப்படுகின்ற பெருந்திட்ட வணிக வளாகம் கட்டப்படுமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் ஒன்று அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. மிகப் பெரிய வளாகமாக, இந்தியாவில் இருக்கிற அத்தனை மாநிலங்களிலும் தயாராகிற கைத்தறித் துணிகளையும், அங்கே stall-ஆக வைக்கக்கூடிய அளவுக்கு மிகப் பெரிய வளாகமாகக் கட்ட வேண்டுமென்ற எண்ணம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதுசம்பந்தமாக முதலமைச்சரோடு கலந்து பேசி விரைவிலே அந்தத் திட்டம் அறிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.